இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**2019 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் சுயமாக பதிவினை மேற்கொள்ள விரும்பும் அரச திணைக்களங்கள், அரசு உரிமையான வணிக பொதுத் துறை, பொதுக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், பிரதான விநியோகஸ்தர்கள் வியாபார நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவானது ஒன்றிற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் பிரிவிற்குறியதெனின் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் ஒரே கடித உறையினுள் வைத்து அனுப்பப்பட முடியும். மீளப்பெற முடியாத வைப்புத் தொகையாக **ரூபா. 1000/=** ஒவ்வொரு பிரிவிற்குமான பதிவிற்காக செலுத்தப்பட வேண்டும். வைப்புத்தொகையானது **90 நாட்கள்** செல்லுபடியாகும் வங்கிக் கட்டளையுடன் சேர்த்து **நிதியாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்** இற்கு வரையப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பல்கலைக்கழக காசாளிடம் நேரடியாக பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் அனுப்பப்படல் வேண்டும். வழங்குனர்கள் ஆவணங்களை பல்கலைக்கழக வலைத்தளம் **www.seu.ac.lk** இல் பதிவிறக்கம் செய்யமுடியும்.

**காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** மாற்று விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது வியாபார பதிவுச் சான்றிதழில் காணப்படுகின்றவாறான வியாபார வகையை மாத்திரம் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழகமானது எந்தவொரு விண்ணப்பத்தினையும் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் உரிமையைக் கொண்டுள்ளது. அடுத்தடுத்துவரும் 3 தடவைகளிலான விலைகோரல்களுக்கு பதிலளிக்கத்தவறும் எந்தவொரு வழங்குனரும் எவ்வித அறிவித்தலுமின்றி 2019 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்கள் பதிவாளர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவர். சாதாரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்விமனுக்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கோரப்படும் ஆனாலும் வேறு போட்டிச்சலுகைகளிருந்து கேள்விமனுக்களைக் கோரும் உரிமையை பல்கலைக்கழகம் கொண்டிருக்கிறது.

2019 ஆம் ஆண்டிற்காக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் ஆகக்குறைந்தது 45 நாட்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு உடன்பட வேண்டும். இந்நிபந்தனை மீறப்படுமிடத்து பதிவின் பின்னராக இருப்பினும் குறிப்பிட்ட வழங்குனர் பதிவுப்பட்டியலிருந்து நீக்கப்படுவார்.

வழங்குனர், பெறுமதி சேர் வரி (VAT) இற்குப் பொறுப்புடையவராயின் VAT சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பபத்துடன் இணைக்கப்படல் வேண்டும். வழங்குனர்கள் VAT இற்குப் பொறுப்புடையவரல்லா் எனின் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வரிவிலக்கு சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பபத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.மேற்கூறப்பட்ட சான்றிதழ்கள் சமா்ப்பிக்கப்படாததும் பூரணப்படுத்தப்படாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எல்லா விண்ணப்பங்களும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **"வழங்குனர்கள் பதிவு – 2019 "** என்று குறிப்பிடப்பட்டு **பிரதி நிதியாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா, ஒலுவில் #32360** என்று முகவரியிடப்பட்டு 26.12.2018 அன்று அல்லது அதற்கு முன்னர்பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழின்பிரதியொன்றையும் அனுப்பிவைக்க வேண்டும்.மேற்கூறிப்பிப்பட்ட சான்றிதழ் சமா்ப்பிக்கப்படாததும் முழுமையாக பூரணப்படுத்தப்படாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வலைத்தளத்தில்**www.seu.ac.lk**பார்வையிடலாம்.

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் # 32360